ஊடக அறிக்கை
தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477423 +94 11 2346257
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

வெளியிடுபவர் தொடர்பூட்டல் திணைக்களம்
திகதி 2021.10.29

## முறிவடைந்த உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கு புத்துயிரளிப்பதற்கான ஆலோசனைக் குழுவினைத் தாபித்தல்

முறிவடைந்த நிதிக் கம்பனிகளுக்கான சாத்தியமான புத்துயிரளித்தல் தெரிவுகளைப் பரீட்சிப்பதற்கு இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை ஆலோசனைக் குழுவொன்றினைத் தாபித்துள்ளது.

இக்குழு வியாபாரத் துறையிலிருந்து நான்கு (04) புகழ்பெற்ற நிபுணர்களை உள்ளடக்குவதுடன் *சிபிசி பினான்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் தலைவரும், கொமர்ஷல் பேங் ஒப் சிலோன் பிஎல்சியின் முன்னாள் தலைவரும், இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் துணை ஆளுநருமான திரு. தர்ம தீரசிங்க* தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். ஏனைய உறுப்பினர்களாக *பிரைஸ்வோட்டஹவுஸ்கூப்பர்ஸின் முகாமைத்துவப் பங்காளர்* திரு. சுஜீவ முதலிகே; *மூரேஸ் ஸ்டீபன் கன்ஸ்சல்டிங் (பிறைவெட்) லிமிடெட் முகாமைத்துவப் பணிப்பாளர்* திரு. திசான் சுபசிங்க; மற்றும் *அமரசேகர அண்ட் கம்பனி பட்டயக் கணக்காளர்களின் சிரேஷ்ட பங்காளர் (கணக்காய்வு மற்றும் உத்தரவாதம்)* திரு. தியாகராஜா தர்மராஜா ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

*இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர்* முனைவர் ராணி ஜெயமஹா குழுவின் ஆலோசகராகப் பணியாற்றுகின்ற அதேவேளை *இலங்கை மத்திய வங்கியின் உதவி ஆளுநர்* திரு. ஜே.பி.ஆர் கருணாரத்ன குழுவிற்கான செயலாளராகப் பணியாற்றுவார்.

இன்றுள்ளவாறு உரிமங்கள் ஒன்றில் இடைநிறுத்தப்படடுள்ள அல்லது இரத்துச் செய்யப்பட்டுள்ள பின்வரும் ஐந்து (05) முறிவடைந்த நிதிக் கம்பனிகளுக்கான சாத்தியமான புத்துயிரளித்தல் தெரிவுகளைப் பரிந்துரைக்கும் பொறுப்பினை நாணயச் சபை குழுவிற்கு உரித்தளித்துள்ளது.

i சென்ரல் இன்வெஸ்ட் அன்ட் பினான்ஸ் லிமிடெட்
ii ஈரிஜ பினான்ஸ் லிமிடெட்
iii ரிகேஎஸ் பினான்ஸ் லிமிடெட்
iv த பினான்ஸ் கம்பனி பிஎல்சி
v த ஸ்டேன்டட் கிரடிட் பினான்ஸ் லிமிடெட்

குழு, ஐந்து இடருக்குள்ளான கம்பனிகளினதும் தற்போதைய நிதியியல் நிலைமை பற்றிய சுயாதீன மதிப்பீடுகளை நடாத்துமெனவும் நிதியியல், சட்ட, வரி, அத்துடன் தொழிற்பாடுகளின் வேறு முக்கிய விடயப்பரப்புகளை உள்ளடக்கி உரிய விழிப்புக் கவனத்தினை நடாத்துவதற்கும்; உரிய விழிப்புக் கவனத்தில் கண்டறியப்பட்டவைக்கு அமைவாக அவசியமான சீர்படுத்தல்களைக் கூட்டிணைத்ததன் பின்னர் நிறுவனங்களின் நிதியியல் நிலைமைகளை மதிப்பிடுவதற்கும் அநுகூலங்களையும் பிரதிகூலங்களையும் சுட்டிக்காட்டி ஒவ்வொரு நிறுவனத்திற்குமென சாத்தியமான புத்துயிரளித்தல் தெரிவுகளைப் பரீட்சிப்பதற்கும் குழு எதிர்பார்க்கப்படும். எனினும், குறித்த நிறுவனமொன்றினை புத்துயிரளிப்பது சாத்தியமற்றதாகக் காணப்படுமெனின் சொல்லப்பட்ட நிறுவனத்தை குழு தீர்த்துக்கட்டுவதற்குப் பரிந்துரைக்கலாம்.

## முறிவடைந்த உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளைப் புத்துயிரளிப்பதற்கான ஆலோசனைக் குழு

| | |
|---|---|
|  | திரு. தர்ம தீரசிங்க<br>தலைவர்,<br>சிபிசி பினான்ஸ் லிமிடெட்,<br>முன்னாள் தலைவர், கொமர்ஷல் பேங் ஒப் சிலோன் பிஎல்சி<br>முன்னாள் துணை ஆளுநர்,<br>இலங்கை மத்திய வங்கி |
|  | திரு. சுஜீவ முதலிகே<br>முகாமைத்துவப் பங்காளர்<br>பிரைஸ்வோட்டஹவுஸ்கூப்பர்ஸ் |
|  | திரு. திசான் சுபசிங்க<br>முகாமைத்துவப் பணிப்பாளர்,<br>மூரேஸ் ஸ்டீபன் கன்ஸ்சல்டிங் (பிறைவெட்) லிமிடெட் |
|  | திரு. தியாகராஜா தர்மராஜா<br>சிரேஷ்ட பங்காளர் (கணக்காய்வு மற்றும் உத்தரவாதம்)<br>அமரசேகர அன்ட் கம்பனி பட்டயக் கணக்காளர்கள் |
|  | முனைவர் ராணி ஜெயமஹா<br>நியமிக்கப்பட்ட உறுப்பினர்<br>இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை |